1980 ஜூலை 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எப்படியோ பொதுமக்கள் பெரும்பாலோர்க்கு தங்கள் தங்கள் அதிருஷ்டத்தில் நம்பிக்கை இருக்கிறது. ஆகவே அப்படி அதிருஷ்டத்தில் இருக்கிற நம்பிக்கையைப் பயன்படுத்தி பல பேர்கள் பணம் ஈட்ட முயல்கிறார்கள். அவர்வர்கள் ஆங்காங்கு அப்படி முயல்றார்கள் என்பது மட்டுமல்ல, பலர் ஏமாற்றவும் செய்கிறார்கள். பரிசுச் சீட்டு என்று வைத்து நடத்தி பணம் திரட்டிய பிறகு அதை எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் நடைபெற வேண்டாம் என்ற காரணத்தினால் தான் நம்பிக்கை மூலம் பெறுகிற பணம் அரசின் வளர்ச்சிக்கும் மற்றவைகளுக்கும் பயன்படுவது நல்லது என்ற காரணத்தாலும் இந்த பரிசுச் சீட்டு முறையை அரசே ஏற்று நடத்துகிற முறையில் இந்தியாவில் எல்லா மாநிலங்களும் மேற்கொண்டு இருக்கின்றன. தமிழ்நாடு அரசும் மேற்கொண்டிருக்கிறது. இதில் பரிசுச் சீட்டு விழுமானால் அவரவர்களுக்கு லாபம், விழா விட்டால் இந்த அரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடை கொடுத்தோம் என்ற் மன திருப்தியோடு இருக்கலாம். தனி நபர்களுக்கு நன்கொடை போய் சேருவதைவிட அரசுக்கு நன்கொடை கிடைக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. அதற்காகத்தான் அரசாங்கம் இதை நடத்துகிறது.

## மதுரையில் வானொலி நிலையம்.

*வினா எண் 56—திரு. என். எஸ். வி. சித்தன், திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

மதுரையில் ரேடியோ நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதை மாநில அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுரையில் வானொலி நிலையத்தை 6-வது திட்ட காலத்தில் அமைத்திட இந்திய அரசு ஒத்துக் கொண்டுள்ளது. ஆனால் இந்திய அரசின் நிதி அமைச்சகத்தைச் சேர்ந்த செலவு-நிதிக் குழுவின் ஒப்புதலையும் நிதி ஒதுக்கீட்டையும் எதிர்பார்த்திருப்பதாக செய்தி ஒலி பரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பண்டைத் தமிழர்களின் நாகரீகமான கட்டடக்கலை, சிற்பக் கலை இவற்றிற்கு சான்று கூறி நிற்கிற வரலாற்றுப் புகழ்மிக்க மதுரை நகரம் தமிழ் நாட்டின் இரண்டாவது பெரிய நகராக இருக்கிறது. ஆகவே

மதுரை திருநகரில் வானொலி நிலையத்தை அமைக்க வேண்டு மென்றகோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆகவே மத்திய அரசு திட்டத்தில் சேர்ந்தாலும் கூட அல்லது நிதி அமைச்சகத்தின் ஒப்புதல் பெறுவது ஒருபுறமிருந்தாலும் கூட இதன் முக்கியத்துவத்தைக் கருதி ஐந்தாண்டுகளுக்குள்ளாக—ஐந் தாண்டுகள் என்பது அதிகப்படியாகும்—இரண்டுமூன்று ஆண்டு களுக்குள்ளாக அரசாங்கம் முயன்று இதைச் செயல்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அநேகமாக இந்தத் திட்டம் இனிமேல் நீட்டிக் கொண்டிருக்க அல்லது காலம் தாழ்த்தி இழுத்துக் கொண்டு இருக்காது என்று தெரிகிறது. மத்திய அமைச்சர் ஒருவர் சென்னை வந்தபோது உறுதியளித்து சென்று இருக்கிறார். வானொலித் துறையும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. நாமும் இடத்தை ஒதுக்கி வைத்திருக்கி றோம். ஆகவே விரைவில் அந்த வானொலி நிலையம் அமைப் பதற்கான முயற்சிகள் இந்திய அரசு எடுத்துக்கொள்ளும் என்று நிச்சயமாக நம்பலாம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மதுரையில் அமைக் கக் கூடிய இந்த வானொலி நிலையம் தனிப்பட இயங்கக் கூடிய வானொலி நிலையமா? அல்லது சென்னை, திருச்சி அஞ்சல் செய்யக்கூடிய வானொலி நிலையமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுரையில் தனி வானொலி நிலையமாக அமைப்பதுதான் இந்தத் திட்டம்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தமிழ்நாட்டில் தனித்து இயங்கும் இரண்டு வானொலி நிலையங்கள் இருக்கின்றன. வட மாநிலங் களில் இதே நிலைதானா ? பிற மாநிலங்களைப் பார்க்கும் போது நம் மாநிலத்தில் வானொலி நிலையங்கள் அதிகமாக நிறுவப்பட்டிருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துத் தர இயலும்.

[முற்பகல் 9-30]

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வானொலி நிலையங்களில் ஒலிபரப்பப்படு கின்ற நிகழ்ச்சிகளைவிட, சிலோன் வானொலி நிலையம் ஒலி பரப்புகின்ற நிகழ்ச்சிகளை மக்கள் அதிகம் கேட்கிறார்

கள். எனவே, சிலோன் வானொலி நிலையம் ஒலிப்பரப்பு கின்ற நிகழ்ச்சிகளைப் போல் இங்கேயும் ஒலி பரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா? இந்த ஒலிப் பரப்பு நிகழ்ச்சிகளை கேட்காத நிலை இருக்கிற இப் போது மதுரையில் ஒன்று திறக்க இருப்பதுபோல், மன்னார் குடியிலும் ஏற்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் இந்தக் கேள்வியை டெல்லி நாடாளுமன்றத்தில் கேட்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மன்னார் குடியில் ரேடியோ நிலையம் வருகின்ற அளவிற்கு இன்னும் எத்தனை ஆண்டுக் காலம் ஆகும் என்பதை இப்போது சொல்ல முடியாது.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் வானொலி நிலையம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது வரவேற்கக் கூடிய அம்சம். எந்த இடத்தில் அமைக்கப்பட இருக்கிறது? அதனுடைய சக்தி என்ன என்பதை தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சொக்கிக்குளம் கிராமக் கண்மாய் சர்வே டி.எஸ். எண் 974/1ல் உள்ள சுமார் 4.15 ஏக்கர் நிலத்தில் அந்த வானொலி நிலையம் அமைக்கப்பட இருக்கிறது. அங்கே அமைக்கப் பட இருக்கின்ற வானொலி நிலையத்தில் சக்தி என்ன என் பதைப் பற்றிய விவரம் இல்லை.

திரு என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, 27 ஆம் தேதி அன்று பிற்பகல் 12 மணி அளவில் நடைபெற்ற சூரியகாந்தி கலை நிகழ்ச்சியில் தொழிற்சங்க இயக்கத்தைப் பற்றியும், தொழிற் சங்கத் தலைவர்களைப் பற்றியும், தொழிலாளர் குடும்பத்தைப் பற்றியும் எவ்வளவு கேவல மாகச் சொல்ல முடியுமோ .......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி மதுரையில் வானொலி நிலையம் வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றியது. எனவே, அடுத்த கேள்வி,